# வேலையில் சுகாதாரம் & பாதுகாப்பு

## தடுப்பு நடவடிக்கை இங்கு துவங்குகிறது

*ஒன்டாரியோவின்* தொழில் சார்ந்த சுகாதாரம் மற்றும் பாதுகாப்புச் சட்டம் **(Occupational Health and Safety Act)** *பணியாளர்களுக்கான உரிமைகளை வழங்குகிறது. இது பணியமர்த்துனர்கள், மேற்பார்வையாளர்கள் மற்றும் பணியாளர்களுக்கான பொறுப்புகளை அமைக்கிறது. அதன் மூலம் அவர்கள அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்றி பணியிடத்தை பாதுகாப்பானதாக ஆக்கலாம்.*

### சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை மேம்படுத்துக:

- உங்கள் கூட்டு சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் குழு அல்லது சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரதிநிதியைப் பற்றி **அறிந்து கொள்ளவும்.**
- உங்கள் பணியமர்த்துனர், மேற்பார்வையாளர், பணியாளர்கள், கூட்டு சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் குழு அல்லது சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரதிநிதியிடம், சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகள் குறித்து **உரையாடவும்.**

### 1-877-202-0008 இல் தொழில், பயிற்சி, திறன் விருத்தி அமைச்சை (Ministry of Labour, Training and Skills Development) அழைக்க

தீவிரக் காயங்கள், உயிரிழப்புகள், வேலை மறுப்புக்களை எந்த நேரத்திலும் புகார் செய்யவும்.

பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தகவல்கள், வாரநாட்களில் காலை 8:30 மணி முதல் மாலை 5:00 மணி வரை.

ஏதேனும் அவசரநிலைக்கு? எப்பொழுதும் 911 ஐ உடனடியாக அழைக்கவும்.

### மேலும் அறிந்து கொள்க:
**ontario.ca/healthandsafetyatwork**

© Queen's Printer for Ontario

**Ministry of Labour, Training and Skills Development**
ISBN 978-1-4868-4140-0 (அச்சிடு)
ISBN 978-1-4868-4141-7 (PDF)

**2020 பெப்புருவரி**

### பணியாளர்களுக்கு:

- பணியிட அபாயங்கள் மற்றும் அதற்கு என்ன செய்வது என்பதை குறித்து **அறிந்து கொள்ள** உரிமையுள்ளது.
- பணியிடத்தில் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதில் **பங்கேற்க** உரிமையுள்ளது.
- பாதுகாப்பற்றது என நம்பினால் பணியை **மறுக்க** உரிமையுள்ளது.

### பணியார்கள்:

- சட்டம் மற்றும் பணியிடச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளையும் செயல்முறைகளையும் **பின்பற்ற** வேண்டும்.
- அவர்களின் பணியமர்த்துனர்களால் வலியுறுத்தப்படும் பாதுகாப்பு சாதனங்களை **அணியவும், பயன்படுத்தவும்** வேண்டும்.
- அவர்களையோ மற்றவர்களையோ காயப்படுத்தாதவாறு **பணியாற்றவும் செயல்படவும்** வேண்டும்.
- ஏதேனும் அபாயங்கள் அல்லது காயங்களை அவர்களின் மேற்பார்வையாளர்களிடம் **முறையிட** வேண்டும்.

*சட்டத்தை பின்பற்றுவதற்காகவும் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புப் பிரச்சினைகளை எழுப்புவதற்காகவும்,* ***பணியாளர்களுக்கு எதிராக பணியமர்த்துனர்கள் எவ்வித நடவடிக்கையும் எடுக்கக்கூடாது.***

### பணியமர்த்துனர்கள்:

- எவ்வாறு பாதுகாப்பாக பணியாற்றுவது குறித்த தகவல்கள், அறிவுறுத்தல்கள். மற்றும் கண்காணிப்பை வழங்குவதன் மூலம், பணியாளர்கள் அபாயங்கள் மற்றும் ஆபத்துக்கள் குறித்து அறிந்திருப்பதை **உறுதிசெய்ய வேண்டும்.**
- வேலையில் பணியாளர்களின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பை காக்க, என்ன தேவைப்படும் என்று மேற்பார்வையாளர்கள் அறிந்திருப்பதை **உறுதிசெய்ய வேண்டும்.**
- பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளையும் செயல்முறைகளையும் **உருவாக்க வேண்டும்.**
- அனைவரும் சட்டம் மற்றும் பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளையும் செயல்முறைகளையும் பின்பற்றுகிறார்கள் என்பதை **உறுதிசெய்ய வேண்டும்.**
- பணியாளர்கள், சரியானப் பாதுகாப்பு சாதனத்தை அணிகிறார்கள் மற்றும் பயன்படுத்துகிறார்கள் என்பதை உறுதி **செய்ய வேண்டும்.**
- பணியாளர்கள், காயமடைவதைத் தடுக்கவோ அல்லது வேலை தொடர்பான உடல்நலக் குறைவு ஏற்படுவதிலிருந்து தடுக்கவோ அவர்களைப் பாதுகாக்க சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் நியாயமான **அனைத்தையும் செய்ய வேண்டும்.**

### மேற்பார்வையாளர்கள்:

- அபாயங்கள் மற்றும் ஆபத்துக்களைக் குறித்து பணியாளர்களிடம் **கூறி**, அவர்களின் பிரச்சினைகளுக்கு உரிய நடவடிக்கைகளை **எடுக்கவேண்டும்.**
- எவ்வாறு பாதுகாப்பாகப் பணியாற்றுவது என பணியாளர்களுக்கு **காண்பித்து** சட்டம் மற்றும் பணியிடச் சுகாதாரம் மற்றும் பாதுகாப்புக் கொள்கைகளையும் செயல்முறைகளையும் அவர்கள் பின்பற்றுகிறார்கள் என்பதை **உறுதிசெய்ய வேண்டும்.**
- பணியாளர்கள், சரியானப் பாதுகாப்புச் சாதனத்தை அணிகிறார்கள் மற்றும் பயன்படுத்துகிறார்கள் என்பதை உறுதி **செய்ய வேண்டும்.**
- பணியாளர்கள், காயமடைவதைத் தடுக்கவோ அல்லது வேலை தொடர்பான உடல்நலக் குறைவு ஏற்படுவதிலிருந்து தடுக்கவோ அவர்களைப் பாதுகாக்க சூழ்நிலைக்கு தகுந்தாற்போல் நியாயமான **அனைத்தையும் செய்ய வேண்டும்.**

Ontario